திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் அருகில் உள்ள கொழுமம் (சங்கரராமநல்லூர்) பகுதி, கொங்கு நாட்டின் மிக முக்கியமான வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் ஒன்றாகும். அமராவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ள இவ்வூர், சுமார் 800 முதல் 1,000 ஆண்டுகள் பழமையான வரலாற்றைக் கொண்டுள்ளது.

மடத்துக்குளத்தை அடுத்த கொழுமம் அருகிலுள்ளது ஐவர் மலை (அய்யம்பாளையம்). இந்த மலையில் சமண மதத் துறவிகள் வாழ்ந்ததற்கான கல்வெட்டுகளும், பாறைச் சிற்பங்களும் உள்ளன. இது கி.பி. 9, 10-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வரலாற்றுச் சின்னமாகும்.

## சின்னச் சின்னதாய்



ஜி.கே.என்.எம். மருத்துவமனையில் நடந்த சிறுநீரக ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மருத்துவர்கள் உள்ளிட்டோர்.

### ஜி.கே.என்.எம். மருத்துவமனையில் சிறுநீரக விழிப்புணர்வு நிகழ்ச்சி

**கோவை**

உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு, கோவை ஜி.கே.என்.எம். மருத்துவமனை, சிறுநீரக ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நேற்று முன்தினம் நடத்தியது. இதில், சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர்கள் பங்கேற்று, பி.வி.எம்.குளோபல் பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

சிறுநீரக நோயின் ஆரம்ப கால அறிகுறிகளை கண்டறிதல், சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சை பெறுவதன் அவசியம், மேம்பட்ட சிகிச்சை முறைகள் பற்றிய புரிதல், சிறுநீரகக் கோளாறுகளை தடுக்க வாழ்க்கை முறை மாற்றங்கள் ஆகியவை குறித்து விளக்கினர்.

இந்நிகழ்ச்சி, ஜி.கே.என்.எம். புறநோயாளிகள் மருத்துவ மையத்தின் மருத்துவ இயக்குநர் டாக்டர் ராகவேந்திரா தலைமையில் நடைபெற்றது. பெரியவர்களுக்கான சிறுநீரக நிபுணர்கள் ராமச்சந்திரன், ஜெயப்பிரகாஷ், குழந்தைகளுக்கான சிறுநீரக நிபுணர் அனுரேகா, சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர் மஞ்சுநாத் ஆகியோர் பங்கேற்றனர். சமூக ஆரோக்கியத்துக்கான ஒரு பகுதியாக, ஜி.கே.என்.எம். மருத்துவமனை பள்ளி ஆரோக்கிய கூட்டாண்மை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஜி.கே.என்.எம் மருத்துவமனை 'ஸ்கூல் ஹெல்த் பார்ட்னர்' ஆக உருவெடுத்து, குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் சிறப்பு மருத்துவ சேவைகளை மேம்படுத்தி, சமூகத்தின் நம்பிக்கைக்குரிய குடும்ப மருத்துவமனையாக திகழ இலக்கு நிர்ணயித்துள்ளது.



கோவையில் நடைபெற்ற தலைமைத்துவ அதிகாரமளிப்பு உச்சி மாநாட்டில் சிறந்த திறமையாளர் விருது பெற்ற மாணவர்களுடன் நேரு கல்விக் குழும நிர்வாகிகள் உள்ளிட்டோர்.

### கோவை நேரு கல்விக் குழுமம் சார்பில் தலைமைத்துவ அதிகாரமளிப்பு மாநாடு

**கோவை**

நேரு கல்விக் குழுமங்கள் மற்றும் ரோட்டரி திஷா 2026 சார்பில் 'என்ஜிஐ – ஷிவ் கேரா கனெக்ட்: தலைமைத்துவ அதிகாரமளிப்பு உச்சி மாநாடு 2026' கோவையில் நடைபெற்றது. பி.கே. தாஸ் பல்கலைக்கழக பதிவாளர் பி.அனிருதன் வரவேற்றார். நேரு குழும நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியும், செயலாளருமான பி.கிருஷ்ணகுமார் பேசுகையில், "தரமான கல்வி மற்றும் முழுமையான ஆளுமை வளர்ச்சி மூலம் பொறுப்புணர்வு கொண்ட தலைவர்களை உருவாக்குவதே நிறுவனத்தின் நோக்கமாகும்" என்றார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் ஆளுநரும், சர்வதேச ஊக்க மளிக்கும் பேச்சாளருமான கே.ஏ.குரியச்சன் சிறப்புரையில், தலைமைத்துவம், விடாமுயற்சி மற்றும் சமூகப் பொறுப்பு குறித்த முக்கிய கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

இதையடுத்து, தலைமைத்துவ பயிற்சியாளரும், எழுத்தாளருமான ஷிவ் கேரா ஊக்கமளிக்கும் சிறப்பு அமர்வை நடத்தினார். இந்த நிகழ்ச்சியின்போது, தமிழகத்தில் உள்ள நேரு குழும நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்திய 11 மாணவர்களுக்கு கல்வி, தலைமைத்துவம், புதுமை மற்றும் நிறுவனச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கியதற்காக 'சிறந்த திறமையாளர் விருது' வழங்கப்பட்டது. இறுதியாக, நேரு விமானவியல் கல்லூரி டீன் பி.ஆர்.பாலாஜி நன்றி கூறினார்.

நீலகிரி மாவட்டத்தில்

## ரூ.40 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்

**ஊட்டி**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் நீலகிரி மாவட்டத்தில் ரூ.40.46 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டப்பணிகளை செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டம், ஊட்டி பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் நடந்த இந்நிகழ்வில், 2,271 பயனாளிகளுக்கு ரூ.7.55 கோடி மதிப்பில் பல்வேறு நலத் திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார். முன்னதாக, வனத் துறை சார்பில் நாடுகாணியில் உள்ள ஆர்கிடோரியம் தொடர்பான குறும்படத்தினை அவர் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வன அலுவலர்கள் கஷ்யப் ஷஷாங் ரவி, தர்மராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக நீலகிரி மாவட்டத்தில் நடந்து வரும் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உள்ளிட்ட துறைகளின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அமைச்சர் சாமிநாதன் கேட்டறிந்தார்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், ஊட்டி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர்.கணேஷ் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஊட்டியில் நடந்த நிகழ்ச்சியில் பயனாளி ஒருவருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அரசு கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் வழங்கினர்.

## கோவை தெற்கு மாவட்ட திமுக சார்பில் நலத்திட்ட உதவி வழங்கல்

**கோவை**

முதல்வர் மு.க.ஸ்டாலின் 73-வது பிறந்தநாளை முன்னிட்டு, திமுக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி ஏற்பாட்டில் கோவை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட சூலூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை ஆகிய நான்கு சட்டப்பேரவைத் தொகுதிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது.

சூலூர் வடக்கு ஒன்றியம் ராசி பாளையம் ஊராட்சி அருகம் பாளையத்தில் நடந்த விழாவில், 3 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணியை கோவை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் தளபதி முருகேசன் தொடங்கி வைத்தார். இதில் சூலூர் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் சிபி.கே.செந்தில் குமார் மற்றும் பலர் பங்கேற்றனர்.



சூலூர் அருகே அருகம்பாளையத்தில், பொதுமக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் பணியை கோவை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் தளபதி முருகேசன் தொடங்கிவைத்தார்.

## அரசியல்வாதிகள் போன்று செயல்படும் அரசு அதிகாரிகள்

### இந்து முன்னணி குற்றச்சாட்டு

**திருப்பூர்**

தமிழகத்தில் அரசு அதிகாரிகள் அரசியல்வாதிகள் போல் செயல்படக் கூடாது என இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் பள்ளி மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக எதிர்க் கட்சிகள், பொதுமக்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தமிழக அரசின் உள்துறை செயலாளர், டிஜிபி உள்ளிட்ட அதிகாரிகள் இணைந்து பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தினர்.

அதில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முந்தைய தகவல்களை எல்லாம் தெரிவித்து அரசியல்வாதிகள் போல் பேட்டி அளித்தது அதிர்ச்சியளிக்கிறது.

மாநில அரசின் நடவடிக்கையை சென்ற ஆட்சியுடன் ஒப்பீடு செய்வது அரசியல் வாதிகளின் செயல்பாடு. அதனை அரசு அதிகாரிகளை கொண்டு தமிழக அரசு செய்ய வைத்துள்ளது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைவை கண்டு மக்கள் வெகுண்டெழும்போது, அதனை சமாளிக்க மக்களை திசை திருப்ப அதிகாரிகளே அரசியல் செய்வது ஏற்புடையது அல்ல.

அரசியல்வாதிகள் அதிகாரம் என்பது 5 ஆண்டுகள்தான். அரசு அதிகாரிகள் பதவி, அதிகாரம் என்பது மக்களின் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும். ஆகவே, அரசு அதிகாரிகள் அரசியல் வாதிகள் போல செயல்படக் கூடாது.

இவ்வாறு அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## விபத்தில் மூளைச்சாவு அடைந்த சிறுவனின் உடல் உறுப்புகள் தானம்

### அரசு சார்பில் மலர்வளையம் வைத்து மரியாதை

**உடுமலை**

உடுமலை அருகே சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்த ஐந்தரை வயது சிறுவனின் உடல் உறுப்புகள் தானமாக அளிக்கப்பட்ட நிலையில் சிறுவனின் உடலுக்கு அரசு சார்பில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப் பட்டது.

உடுமலை, தாராபுரம் சாலையில் உள்ள சங்கர் நகரில் வசித்து வந்தவர் யோகானந்தம் (62), சுகாதார ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றவர். இவருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். இருவருக்கும் திருமணமாகி தனித்தனியே வசிக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த 7-ம் தேதி யோகானந்தம் குடிமங்கலம் பகுதியில் இருந்து உடுமலை நோக்கி காரில் வந்தார். காரை அவரே ஓட்டி வந்துள்ளார். உடன் அவரது மைத்துனரும், சிறுவர்களான பேரன் மற்றும் பேத்தி ஆகியோரும் சென்றுள்ளனர்.



சிவ ஆதித்யா

பொன்னேரி கிராமத்தை நோக்கி கார் வந்த போது ஒரு திருப்பத்தில் சாலையோர மரத்தில் மோதி விபத்துக் குள்ளானது.

இதில் காரில் சென்ற சிறுமியை தவிர மற்ற மூவரும் படுகாயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள், யோகானந்தம் ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். படுகாய மடைந்த எஞ்சிய இருவரும் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். அங்கு, விக்னேஷ் - பிரியதர்ஷினி தம்பதியினரின் ஐந்தரை வயது மகன் சிவ ஆதித்யாவுக்கு மூளைச்சாவு ஏற்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சிறுவனின் உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டன. சிறுவனின் உடல் நேற்று உடுமலை, தாராபுரம் சாலையில் உள்ள செல்வபுரம் பகுதிக்கு எடுத்துவரப்பட்டு உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அரசு சார்பில் உடுமலை கோட்டாட்சியர் குமார், வட்டாட்சியர் கவுரிசங்கர் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் சிறுவனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

## ஊட்டியில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் ரோலர் ஸ்கேட்டிங் மைதானம் தொடக்கம்

**ஊட்டி**

நீலகிரி மாவட்டம் ஊட்டி பட்பயர் பகுதியில், ரூ.49.85 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட ரோலர் ஸ்கேட்டிங் மைதானத்தை செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

சிறப்பு திட்ட செயலாக்கத் துறையின் மூலம், ஊட்டி பட்பயர் பகுதியில், ரூ.1.85 கோடி மதிப்பில் சறுக்கு விளையாட்டு பூங்கா அமைப்பதற்கான பணிகள் நடந்து வருகின்றன. இதில், ரூ.49.85 லட்சம்மதிப்பீட்டில் ரோலர் ஸ்கேட்டிங் மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. 110 மீட்டர் நீளம் மற்றும் 5.50 மீட்டர் அகலம் கொண்ட இந்த மைதானத்தை செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறும்போது, 'ஏப்ரல் மாத இறுதிக்குள், ஸ்கேட்டிங் போர்டிங் மைதானம்அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்' என்றார்.

நீலகிரி மாவட்டத்துக்கு வரும் சுற்றுலா பயணிகள், ஊட்டி படகுஇல்லத்திலிருந்து பல்வேறு சுற்றுலா பகுதிகளுக்கு சென்றுவரும் வகையில், 'எங்கும்ஏறலாம் - எங்கும் இறங்கலாம்' என்ற பெயரில், சுற்றுலா பேருந்து இயக்க தொடக்க விழா நடந்தது.செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சுற்றுலா பேருந்து சேவையைத் தொடங்கி வைத்து அதில் பயணம் செய்தார்.

இந்நிகழ்வுகளில், அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா, மாவட்ட காவல் கண்காணிப் பாளர் என்.எஸ்.நிஷா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மண்டல மேலாளர் யுவராஜ், மாவட்ட வன அலுவலர்கள் கஷ்யப் ஷஷாங் ரவி, தேவ ராஜ், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் இந்திரா உள்ளிட் டோர் பங்கேற்றனர்.

## கால்நடை மருத்துவ மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

**உடுமலை**

உடுமலையை அடுத்த பண்ணைக்கிணர் கிராமத்தில் கடந்த 2020-ம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரி மாணவ, மாணவிகள் நேற்று வகுப்புகளை புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் கூறிய தாவது:

தமிழகத்தில் மொத்தம் 7 அரசு கால்நடை மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. கால்நடை பராமரிப்புத் துறையில் ஏற்கெனவே கால் நடை உதவி மருத்துவர்கள் பணியிடங்கள் முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் நிரப்பப்பட்டு விட்டன.

தற்போது புதிதாக 3 தனியார் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு அடித்தள மிடுவதை அறிந்து கால்நடை மருத்துவ கவுன்சில் கடந்த 11-ம் தேதி, அவசர கூட்டம் நடத்தி தனியார் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அவசிய மற்றது என தெரிவித்தது.

எதிர்கால வேலை வாய்ப்பு அபாயத்தை உணர்ந்து புதிய தனியார் கால்நடை மருத்துவக் கல்லூரி உருவாக்குதலை எதிர்க்கிறோம். இது கால்நடை மருத்துவம் பயின்ற பட்டதாரி களிடையே தேக்க நிலையையும், வேலை இல்லா திண்டாட்டத்தையும் உண்டாக்கும். அரசு கல்லூரிகளில் ஆண்டுக்கு 800 பேர் படிப்பை முடித்து வெளியே வருகின்றனர். இது தவிர ஏற்கெனவே சுமார் 8 ஆயிரம் பேர் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கின்றனர். 800 கால்நடை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தி கால்நடை மருத்துவர்களுக்கு பணி வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்,இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வழியாக அனுப்பலாம்.

**மின்னஞ்சல் முகவரி:**
repkovai@hindutamil.co.in

இந்து தமிழ் திசை

**பொறுப்புதுறப்பல்:** இந்நாளிதழில் வெளியாகும் விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்நாளிதழ் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்நாளிதழ் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்நாளிதழ் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தவித குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்**

**மின்னணு - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு - உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோருதல்**

மின்னணு ஒப்பந்தப்புள்ளி, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கீழ்க்காணும் பணிக்காக சென்னை குடிநீர் வாரியத்தில் மேற்கொள்ளும் முறைப்படி ஒரு உறையில் தமிழ்நாடு ஒளவுமுறைவுற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்குட்பட்டு இ-ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளியின் பெயர் மற்றும் எண் | ஒப்பந்த முன் வைப்புத் தொகை | தகுதி | மின்னணு ஒப்பந்தம் சமர்ப்பிப்பு இறுதி தேதி | மின்னணு ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதி I முதல் XV வரை உள்ள பகுதிகளில் குடிநீர் கசிவு கண்டறிதல், குடிநீர் மாசுபாட்டின் மதிப்பீடு, பூமியில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் குழாயின் தற்போதைய தன்மையை அறிவதற்காக ரேடியோட்டிக் இயந்திரங்களை பயன்படுத்தி ரேடியோட்டிக் தீர்வுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு எடுக்கும் பணி உட்பட இரண்டு ஆண்டுகளுக்கு இயக்கி மற்றும் பராமரிக்கும் பணிகள். ஒம்/குநீர்/செகுவா/3714அ/2025-26 | ரூ.2.01 இலட்சங்கள் | ஒப்பந்த ஆவணத்தில் உள்ளபடி | 07.04.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை | 08.04.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பிறகு |
| 2. | ஒப்பந்த முன்வைப்பு தொகையை இணையவழி பரிவர்த்தனையாக இணையதளத்தின் மூலமாக மட்டுமே செலுத்தப்படவேண்டும். ஒப்பந்ததாரர்கள் இணையவழியில் ஒப்பந்த முன்வைப்பு தொகையை செலுத்தியதற்கான ஸ்லேன் செய்யப்பட்ட நகலை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்கவேண்டும். | | | | |
| 3. | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இ-ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கலாம். பிற அனைத்து விவரங்களையும் 14.03.2026 முதல் இணையதளத்தில் வெளியாகும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும். | | | | |

தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம் | செ.ம.தொ.இ/1785/ஒப்பந்தப்புள்ளி/2026 | தலைமை பொறியாளர் (இ & ப) – II / மேற்பார்வை பொறியாளர் (ஓமக) (பொ)

**வரி விளம்பரங்கள்**

**சுய செய்தி**

**பெயர்மாற்றம்**

I Shalini Govindaraj Nidhish D/O, Govindaraj R/o No 2,gowthamapuri Nagar, Coimbatore 641004. have changed my name to Shalini Govindaraj .

**பொது**

**விற்பனை**

EASYTECH CCTV CAMERA



AN ISO 9001:2008 COMPANY

இலவச டெமோவிற்கு அழைக்கவும்

கோயம்புத்தூர் 74488 88902

திருப்பூர் 74488 88903

www.easytechcctv.com

**Central Bank of India** சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா

அம்பத்தூர் கிளை

மனை எண்.270, MTH ரோடு, சிட்கோ இண்டர்ஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600098 Ph: 044-23464301 / 78258 16384

**SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்கள் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) / 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.**

**சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா**-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு அந்த சொத்து **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

**கடன்தாரர்: M/s.A M இன்ஜினியரிங் வொர்க்ஸ்,** யூனிட் II, எண்.2-A, வெள்ளாள தெரு, அத்திப்பேட்டை குப்பம், அம்பத்தூர் இண்டர்ஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600058, **குடியிருப்பு முகவரி: உரிமையாளர்: Mr.சிவசுப்பிரமணியன் பழனி,** எண்.27A, காந்தி நகர், 1வது மெயின் ரோடு, கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை - 600053

**கோரிக்கை அறிவிப்பு தேதி: 22.07.2025 /** கடன் நிலுவைத்தொகை: **11.03.2026** அன்றுள்ளபடி ₹ **80,83,567.50** மற்றும் சட்டப்படியான கட்டணங்கள், வட்டி, இதர செலவுகள்; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 09.10.2025**

**அடமானத்தில் உள்ள சொத்து விவரம்**

**சர்வே விவரம்: SF எண்.24/1 (பரப்பு 6.71 ஏக்கர்) மற்றும் 265 (பரப்பு 8.0 ஏக்கர்) மொத்த பரப்பு 15.21 ஏக்கர் நிலத்தில் ஒரு பகுதி.** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கணபதி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட நகர & கிராம திட்டமிடல் இயக்குனரால் அனுமதிக்கப்பட்ட குறிப்பு எண்.69/95, **மனை எண்.2, சிவராம் நகர், விலாங்குறிச்சி கிராமம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம்** என்னும் முகவரியில் உள்ள **2940 சதுர அடி நிலம்,** அதனுடன் இணைந்த தூண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 30 அடி அகல கிழக்கு மேற்கு வைகாசி தெரு, தெற்கு: SF எண்.263-ல் உள்ள நிலம், கிழக்கு: மனை எண்.3, மேற்கு: மனை எண்.1.

| | | | |
|---|---|---|---|
| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ **1,21,50,000/-** | டேவணித்தொகை | ₹ **12,15,000/-** |
| ஏல உயர்வு தொகை | ₹ **1,00,000/-** | சுவாதீனம் வகை: நேரடி (Physical) | |

இ-ஏல தேதி மற்றும் நேரம்: **20.04.2026** காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

**EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 20.04.2026 மாலை 3.30 மணிக்குள்**

**சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 09.04.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை**

**மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்,** இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: https://baanknet.com **(அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.co.in

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, பிராந்திய அலுவலகம், சென்னை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, முதன்மை மேலாளர்,** Mobile No. 95750 36523, 6264571389, **கிளை மேலாளர்,** Mobile No. 78258 16384 அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

**SARFAESI சட்டம், 2002 விதி 8(6) / 9(1)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு**

மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து இ-ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

**இடம்: சென்னை; தேதி:** 11.03.2026 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா**

**எமது பதிப்புகள்:** சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by M Jegadesh Kumar at THG PUBLISHING PVT.LTD. 391/1 & 391/2 Kamaraj Road, Uppilipalayam, Coimbatore, Tamil Nadu 641015. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).